செ.வெ.எண்.492/2021 நாள்.30.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் தூய்மைக் கணக்கெடுப்பு ஊரகம்-2021 மற்றும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நேற்று (29.10.2021) நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் தூய்மைக் கணக்கெடுப்பு ஊரகம்-2021 மற்றும் வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நேற்று (29.10.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித்திட்டத்தின் கீழ் 646 விவசாயிகளுக்கு பண்ணை குட்டை அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளை வடகிழக்கு பருவமழை காலங்களுக்கு முன்பாக விரைந்து முடிக்கப்பட வேண்டும். மேலும் 100 வேலை திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பணிகளை துரிதபடுத்த வேண்டும். மேலும் பிரதம மந்திரி வீடு வழங்கும் திட்டத்தின் வழங்கப்பட்ட வீடுகள் கட்டும் கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நமது மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் பழுதான சாலைகளை மேம்படத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மாவட்டத்தில் உள்ள 208 ஊராட்சி பகுதிகளிலும் குடிநீர் தங்கு தடையின்றி வழங்க வேண்டும்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் தூய்மைக் கணக்கெடுப்பு ஊரகம்-2021 பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர் இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தூய்மை பாரத இயக்கத்தின் சார்பில் தூய்மைக் கணக்கெடுப்பு ஊரகம்-2021 குறித்து துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் நேற்று (29.10.2021) வெளியிட்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.செல்வராசு, உதவி இயக்குநர் தணிக்கை திரு.பிச்சாண்டி, ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் திரு.சுந்தரபாண்டியன், உதவி திட்ட அலுவலர் திரு.ரூபேஷ்குமார், உதவி செயற்பொறியாளர்கள் திரு.மகேஷ்குமார், திரு.இராஜேந்திரன், திரு.பழனிசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**